அடிக்கல் நாட்டப்பட்ட கைதடி ஆயுள்வேதவைத்தியசாலையின்

Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 115

தபால்பெட்டி எண். 49
போன் 339
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் இசை வைகாசி 23 ரபி.அவ் 8 புதன்கிழமை (5 6-68)

## கதி என்ன ?

### கட்டடவேலைகளை ஆரம்பிக்கும்படி கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

''கைதடியில் ஆயுள்வேத வைத்தியசாலை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியும் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றது. கட்டட வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்''.

அகில இலங்கைச் சித்த ஆயுள் வேதவைத்திய சங்க 37-வது வருடாந்த கூட்டத்தில் சுகாதார மந்திரியைக் கோரும் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

யாழ்ப்பாணம் சித்த ஆயுள் வேத வைத்தியக் கல்லூரி மண்டபத்தில் வைத்தியக் கலாநிதி திரு.வி. வடிவேலு தலைமையில் நடைபெற்றஇச்கூட்டத்தில்நிறைவேற்றப்பட்ட மற்றைய தீர்மானங்கள் வருமாறு:-

[6-ம் பக்கம் பார்க்க]

# இன்றுவெள்ளையறிக்கை நகல் மசோதா சபைக்கு வருகின்றன

## பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள்

கொழும்பு, புதன்

மாவட்டசபை பற்றிய வெள்ளையறிக்கையும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாவட்டசபை நகல் மசோதாவும் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. ஜனப்பிரதிநிதிகள் சபைக் கட்டடத்தைச் சுற்றி இன்று பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## அடையாள அட்டைமசோதா

### உடுவில் எம். பி. பிரசாரம்செய்வார்

குரும்பசிட்டி, செவ்வாய்

அடையாள அட்டை மசோதா தமிழ் மக்களுக்கு நன்மையானது என்று உடுவில் எம். பி. திரு. வீ. தர்மலிங்கம் கிராமந்தோறும் பொது ஸ்தாபனங்களின் ஆதரவில் கருத்தரங்குநிகழ்ச்சிகளை நடாத்தி பிரசாரம் செய்யவிருக்கின்ருர். அண்மையில் ஏழாலை மேற்கு இளைஞர் முன்னேற்றச் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் திரு. தர்மலிங்கம் எம். பி கலந்துகொண்டு உரையாற்றினுர். அடுத்த வாரம் குரும்பசிட்டி கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெறும் கருத்தரங்கில் உடுவில் எம். பி. திரு. வீ. தர்மலிங்கமும், திரு. வ. பொன்னம்பலமும் சொற்பொழிவு நிகழ்த்துவர். ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினத்தையும் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## 'பொருளாதார, அரசியல் துறைகளில்நாடுதிருந்துகிறது'

### பாரதபிரதமர்தெரிவிக்கும்நம்பிக்கை

புதுடில்லி, ஜூன் 4

'பாரதம் இப்போது பொருளாதார, அரசியல் துறைகளில் சீர்திருந்திவருகிறது' என பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

அகில பாரத காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் இன்று நண்பகலில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு இப்போது ஒரு நல்ல இருப்புமுனையிலிருக்கிறது எனக் கூறிய அவர் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நல்ல வாய்ப்புக்களைப் பயன்படுத்தி மக்கள் புது உயிர்த்துடிப்புடன் உழைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

காங்கிரஸ் ஒரு உயிர் போன ஸ்தாபனமல்லவென்றும் அவர் எடுத்துக் கூறினுர்.

இளைஞர்களை காங்கிரஸ் கட்சியில் சேர்க்கவேண்டுமென்ற கோரிக்கை சம்பந்தமாகப் பேசிய துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் முக்கிய பதவி வகிப்பவர்கள் அப்பதவியில் சேரும்போது இளைஞராகத்தானிருந்தனர்கள் என்றும் கூறினுர்.

நாடுஇப்போது ஜனநாயக முறையில் இயங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## 'ஆலயப்பிரவேசம் எமது வேலையல்ல'

அளவெட்டி, செவ்.

''மாவைக்கந்தசுவாமி கோவில் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக உற்சவ உபயகாரர்கள் யாதும் கூறுவதற்கில்லை. இவ்விஷயம் இக்கோவிலைநடத்துள்ள மாவை, பழைய வீமன் காமம் சைவர்களைச் சார்ந்தது அவர்களது முடிபே எமது முடிபாகும். உபயகாரர்கள் உற்சவங்களை நடாத்தி இஷ்டாமிய சித்திகளைப் பெற்று பக்தர்களுக்கு அத்துறையில் ஈடுபடக் கூடியதான சமய சம்பந்தமான காரியங்களைச் செய்வதே தவிர ஆலய நிர்வாகத்திலோ அல்லது அதனைச் சார்ந்த பிரச்னைகளையோ ஆலோசிப்பதற்கில்லை. இது நமது வேலையுமல்ல''

மேற்கண்ட தீர்மானம் மாவிட்டபுரம் [illegible]

## வாழைச்சேனையில் மர்மப் படகு

கொழும்பு, செவ்.

வாழைச்சேனைக்கு அருகிலுள்ள கடற்கரையில் ஒரு மர்மப் படகு காணப்பட்டதாகவும் ஆளில்லாத இந்தப் படகை உதவி சுங்கப் பகுதி அதிகாரி கைப்பற்றி இருப்பதாகவும் செய்தி கிடைத்துள்ளது. இந்தப் படகில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் சிலர் வந்திறங்கியிருக்கலாமெனக் கருதப்படுகிறதாம்.

## ஸ்தாபகர் தின விழா

ஊர்காவற்றுறை, செவ்,

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் அதன் ஸ்தாபகர் தினமும் விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றது. அதிபர் மு. வைத்தியலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

கோவில் ஆதீனகர்தா பிரம்மஸ்ரீ து. சண்முகநாதக்குருக்கள் இல்லத்தில் நடைபெற்ற 'உபயகாரர்' மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது

இதையடுத்து தலைவர் தமது தலைமையுரையில் எவ்வளவுக்கெவ்வளவு உற்சவங்களை புனிதமாகவும், நைஷ்டிகமாகவும் நடத்துகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு பக்திமார்க்கமும் திருவருளும் தோன்றுமென்றுகூறினுர்.

உற்சவங்களை இரவு 12 மணிக்குள் முடித்துவிட வேண்டுமென்று கோரிக்கை உபயகாரர் ஏற்றுக்[illegible]

## இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனை

கொழும்பு, செவ்வாய்

மாவட்டசபை பற்றிய வெள்ளையறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் நிலைமை எப்படியிருக்கிறதென்பதைப் பற்றி பாதுகாப்பு அமைச்சின் தற்காப்புச்சபை இன்றுகாலை கூடி ஆராய்ந்தது.

வெள்ளையறிக்கை விவாதம் நடைபெறும் தினமான 8-ம் தேதிஎடுக்கப்படவேண்டிய தற்காப்பு நடவடிக்கை திட்டங்கள்பற்றியும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

நிலைமையை அவதானித்து அவசியம் ஏற்படின் அவசரகாலச்சட்டத்தைப் பலப்படுத்துவதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தற்காப்புச்சபையில்வெளிவிவகார பாதுகாப்புஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. ஜி. வி. பி. சமரசிங்க. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு ஆலரிக் அபயகுணவர்த்தனு இராணுவதளபதிமேஜர்ஜெனரல் சேபால

(6-ம் பக்கம் பார்க்க)

## "எத்தனைதடவை வந்தாலும் புதிதாகவே தோன்றுகிறது"

— கி. வா. ஜ.

### இலங்கையில் தமிழக அறிஞர்கள்

யாழ்ப்பாணம், புதன்

தமிழறிஞர் கி.வா. ஜகந்நாதனும் பேராசிரியர் வே. சிவசுப்பிரமணியமும் நேற்றுக்காலை விமானத்தில் பலாலி விமானநிலையத்தை வந்தடைந்தபொழுது, உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம்.பி.யுமான திரு.எ சிவசிதம்பரம், மற்றும் பிரமுகர்கள், பல்கலைக்கழக மாணவர்களும் வரவேற்ருர்கள்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் முருகன் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்வதற்காகவே இவர்கள் இங்கு விஜயம் செய்துள்ளனர் நேற்றுமாலைஇரு

[6-ம் பக்கம் பார்க்க]

### மரண அறிவித்தல்

#### முத்துக்குமாரு

கண்ணன் கோஷ்டியின் அதிபரான திரு. கண்ணன் அவர்களின் தந்தை திரு. முத்துக்குமாரு [சக்ரபாணி] அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று புதன்கிழமை மாலை நான்கு மணிக்கு நாச்சிமார் கோவிலடியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து கொம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தகவல்: எம். கண்ணன். 1344

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

ஒருவன் கிழிந்து போனஉடைகளைக்களைந்து எறிந்துவிட்டு வேறு புதியவற்றை உடுத்திக் கொள்வதுபோல உடலைப்பெற்று வாழும் ஆத்மாவும் பழுதுபட்ட உடல்களை உதறித்தள்ளி விட்டுப் புதிய உடல்களில் குடிபுகுகிறது.

—பகவத்கீதை.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

யாழ்ப்பாணம் கீலகவருஷம் வைகாசி மாதம் 23-ந்திகதி
(5-6-68)

## அதிகாரவர்க்க ஆட்சி

மாவட்டசபைகள் அமைக்கப்பட்டாலும், மாவட்ட நிர்வாக அலுவல்கள் யாவும் அரசாங்க ஊழியர்களின் பொறுப்பிலேயேயிருக்கும். "அரசாங்க அதிபரே நிறைவேற்றும் அதிகாரியாக இருப்பார். அவரின் கட்டுப்பாட்டின்கீழ் அரசாங்க ஊழியர்களே, மாவட்ட சபையின் ஊழியர்களாக இருப்பார்கள்.' மாவட்ட சபை நகல் மசோதா இதைத் தெரிவித்திருக்கிறது. அதாவது மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டாலும் அதிகாரவர்க்க ஆட்சி நீடிக்கும்.

மாவட்டசபைமசோதா பற்றியோ அதன் அம்சங்கள் சிலவற்றைப்பற்றியோ ஆராய்வதல்ல இத்தலையங்கத்தின் நோக்கம்.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நிர்வாகப் பயிற்சிக்கழகத்தை ஆரம்பித்துவைத்த பிரதமர் பேசுகையில் அரசாங்க ஊழியர் தம்மை மக்களின் ஊழியர்கள் என்பதை மறந்துவிடக்கூடாதென்றும் மந்திரிகள் சிலரும் அரசாங்க ஊழியர் பலரும் தங்களைப் பொதுமக்களின் எஜமானர்களாக நினைத்துக் கொண்டிருக்கிறார்களென்றும் குறிப்பிட்டு கவலையும் கண்டனமும் தெரிவித்தார். அரசாங்க ஊழியர் பலரும் தங்களைப் பொது மக்களின் ஊழியர்களாகக் கருதிக்கொண்டு பணிபுரிய வேண்டுமென்ற யோசனை இலங்கை சுதந்திரமடைந்த நாட்தொடக்கம் பலரும் பல தடவைகளிலும் கூறிவருவது தான். ஆனாலும் வழிவழி வந்த பழக்கம் விட்டுப் போவதாகக் காணோம். அந்நியரின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் தங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கென உருவாக்கி வைத்த அதிகாரவர்க்கத்தினர்-அரசாங்க ஊழியர்கள்-அன்றைய அந்நிய ஆட்சியாளர்-இந்நாட்டு மக்களை அடிமைகளாகவும் தங்களை எஜமானர்களாகவும் கருதி நடத்தியதுபோலவே, நாடுவிடுதலை அடைந்து, நமது நாட்டில் நமது ஆட்சியில் ஏற்பட்ட பின்னரும் அந்நிய ஆட்சியில் ஏற்பட்ட பழக்கம்-அதிகாரவர்க்கத்தில் தொடர்ந்து நிலைபெற்று வருகிறது. இதற்கு அவர்களைமட்டும்குறைசொல்ல முடியாது.

மக்களின் பிரதிநிதிகளாகச்செல்பவர்கள்சட்ட சபையில், பார்லிமென்டில், எப்படி வாதாடி, எத்தனை அதிகாரங்களை உடைய சட்டங்களை உருவாக்கினாலும் அந்தச் சட்டங்களை அமுல் நடத்தும் பொறுப்பு இறுதியில் தங்களிடமே வரும், தாங்களே நிரந்தரமாக அச்சட்டத்தை அமுல்செய்யும் உரிமையும் அதிகாரங்களும் உடையவர்கள் என்பதை அவர்கள்-அரசாங்க ஊழியர்கள் அறிவார்கள் இதனால்தான் அவர்களில்சிலருக்கு 'அதிகாரிகள்' என்றும் வேறு சிலருக்கு நிரந்தரக்காரிய தரிசிகள் என்றும் பெயர் வந்ததுபோலும்!

இன்றிருக்கும் மந்திரி நாளை மந்திரியாகவே இருப்பார் என்பது நிச்சயமல்ல. இன்று மந்திரியாக இருந்து இன்ன இன்ன அதிகாரங்கள் வேண்டும் என்று கோரும் மந்திரியும், இந்த இந்த அதிகாரங்கள் மந்திரிக்குக் கொடுக்கலாம், கொடுக்கக்கூடாது என்று வாதாடியும், வாக்களித்தும் தீர்மானிக்கும் பிரதிநிதிகளும்கூட அந்தச் சட்டங்களும் அதிகாரங்களும் அமுல்செய்யப்படும் பொழுது, தமக்காகவோ அல்லது தம்மை நாடிவருபவருக்காகவோ, அந்தச் சட்டங்களையும் அதிகாரங்களையும் அமுல் நடத்தும் பொறுப்பையுடைய அதிகாரவர்க்கத்தினரின் உதவியை நாடுகின்றனர். மந்திரிக்காகவும் எம். பி.க்காகவும் சில சமயங்களில் அதிகார வர்க்கத்தினர் 'சலுகை' செய்ய நேரிடுகின்றது. மந்திரிகள், எம். பி.க்களை நாடமுடியாத, அணுக முடியாத அப்பாவி பொதுமக்கள் மீது அதிகார வர்க்கத்தினர் 'அதிகாரம்' செலுத்தவும் நேரிடுகிறது. அதிகாரவர்க்கத்தினர் பொது மக்களை தங்கள் எஜமானர்களாகக் கருதாமல் தங்கள் ஊழியர்களாக, கருதுவதற்கு மந்திரிகள், மாஜி மந்திரிகள், எம்.பி.க்கள் எனப்படும் அரசியல்வாதிகளின் தலையீடும் ஒரு காரணம் என்று சொல்ல இடமுண்டு.

அதிகாரம் அதாவது நிர்வாக சேவையில் அரசியல் தலையீடு நீக்கப்பட்டு, நிர்வாகசேவை அரசியல் தலையீடற்ற சேவையாக்கப்படுவதுடன் பழைய அந்நிய ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகசேவை விதிமுறைகளும் மாற்றப்பட்டால் அதிகாரவர்க்க ஆட்சி மாறலாம். அரசாங்க ஊழியர்களும் தங்களைப் பொதுமக்களின் ஊழியர்கள் என்பதை உணர்ந்து கொள்வர். மாவட்டசபை வந்தாலும் கூட அதிகாரவர்க்க ஆட்சியே நீடிக்குமானால் அவர்கள் மக்களைத் தங்கள் எஜமானர்களாகக் கருதுவார்களென எப்படி எதிர் பார்க்க முடியும்?

### மாவட்டசபை நகல் மசோதா ஒரு நோக்கு

# உத்தேச மாவட்ட சபையில் பொது மக்களின் பங்கு

(மாவட்டசபைகள் பற்றிய வெள்ளை அறிக்கையும் அதனுடன் மாவட்ட சபை நகல் மசோதாவும் வெளியிடப்பட்டிருக்கின்றன. பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் இந்த மாவட்ட சபைகள் பற்றி பலரும் தங்கள்தங்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்பவே வியாக்கியானம் செய்கின்றனர். மாவட்ட நகல்சபை மசோதாவின் முக்கிய அம்சங்களை விருப்பு வெறுப்பின்றி நடுநிலைமையுடன் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.)

"அரசாங்கத்தின் பணிப்பின் கீழும், கட்டுப்பாட்டின் கீழும் இலங்கையின் நிர்வாக மாவட்டங்களின் நிர்வாகத்தில் பொதுமக்கள் கூடிய அளவிலான பங்கெடுப்பதை பெய்தும் நோக்கத்துடன் அத்தகைய மாவட்டங்களுக்காக மாவட்டசபைகளை அமைத்தற்கும், அதனோடு தொடர்பான அல்லது அதன் இடைநேர் விளைவான காரியங்களுக்குமான தொகு சட்டம்.

**எஸ். எம். ஜி.**

இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழும் அவற்றுக்கிணங்கவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்டசபை ஒன்று அமைக்கப்படுதல் வேண்டும்.

மாவட்டசபை ஒவ்வொன்றும் இச்சட்டத்தினால் அல்லது எழுத்திலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தினால் அதற்கு வழங்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அத்தகைய தத்துவங்கள், பணிகள், கடமைகள் ஆகியவற்றைப் பிரயோகித்தல்வேண்டும், நிறைவேற்றுதல்வேண்டும், புரிதல் வேண்டும்."

மாவட்டசபை நகல் மசோதாவின் முதற் பகுதியின் முதல் தொடக்க வாசகங்கள் இவை. இந்த நகல் மசோதா முழுவதையும் அம்சம் அம்சமாக ஆராய்வதற்குப் பத்திரிகையில் இடவசதியும் போதாது அது அவசியம் என்றும் நாம் கருதவில்லை. முக்கியமான அம்சங்களை ஆராய்வதும் அதனைப் பொதுமக்களின் பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பதே நமது முக்கிய நோக்கமாகும். ஆயினும் நகல் மசோதாவின் முதல் தொடக்க வாசகங்களைச் சிறிது கவனிப்போம்.

மாவட்டங்களின் நிர்வாகத்தில் பொதுமக்கள் கூடிய அளவு பங்குகொள்வதற்கு வாய்ப்பு அளிப்பதுதான் மாவட்டசபைகளின் நோக்கம் என்பது நகல்மசோதாவின் முதல் வாக்கியம். அதாவது மாவட்ட நிர்வாகங்களில் இப்பொழுது பொதுமக்களுக்குள்ளதை விட அதிக பங்கு அளிப்பது அரசாங்கத்தின் நோக்கம். உள்ளூராட்சி மன்றங்கள் இருப்பினும் அந்தந்தப்பகுதி மக்களுக்கு அந்தந்தப்பகுதி நிர்வாகத்தில் அதிக பங்கு கொடுக்கப்படவில்லையென்பது இதன் அர்த்தம். உள்ளூராட்சி மன்றங்களில் அந்தந்த உள்ளூர்மக்கள் தெரிவு செய்த பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சில அதிகாரங்களிருப்பினும் அந்த அதிகாரங்கள் போதாதென்பது நீண்டகாலமாகத் தெரிவிக்கப்பட்டுவரும் குறைபாடு. அரசாங்கத்தில் சகல அதிகாரங்களும் குவிந்திருப்பதால்தான் நாட்டின் அபிவிருத்தி ஏற்பட முடியா-

திருக்கிறதென்றும் ஒரே இடத்தில் குவிந்திருக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டால் நாட்டின் அபிவிருத்தி துரிதமடையுமென்றும் மக்களுக்கு நாட்டின் அபிவிருத்தியில் அதிக அக்கறை ஏற்படுமென்றும் பல தடவைகளிலும் பலரும் யோசனை தெரிவித்துவந்திருக்கின்றனர். உள்ளூராட்சி மன்றங்களுக்கு இன்று ஓரளவு உரிமையும் அதிகாரங்களும் இருப்பது கூட காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவினால் தான் என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். திரு. பண்டாரநாயகா உள்ளூ

[6-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

[5 - 6 - 68]

வைகாசி மீ 23 வ.

புதன்கிழமை

திதி - நவமி, 3-38 மேல் தசமி.

நட்சத்திரம்- உத்தரம், மாலை 5-06 மேல் அத்தம்.

ராகுகாலம் - 11-52—1-22.

சுபநேரம் - 4-22—5-52.

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு நீண்ட பயணத்துக்கு இடமுண்டு சில காலமாக உங்களைப் பீடித்திருந்த நோய் குணமாகும். வாகனச் சாரதிகள் அவதானத்துடன் நடந்துகொள்ளவும். சிலர் புதுமனை எழுப்பி, புகுவிழா நடத்துவர். வணிகர்களுக்குப் பலன் தரும் காலம். நெருங்கிய நண்பர் ஒருவருடன் அபிப்பிராயபேதம்பட நேரிடலாம். எனவே வீண் சர்ச்சைகளில் ஈடுபடாதிருக்கவும். எதற்கும் அடக்கத்துடன் இருப்பின் நற்பலனுண்டு.

மேஷம்- தொழிலில் தொல்லை, துன்பம் தொடரும்.

ரிஷபம்- பரந்தநோக்கு பரம்பொருள் சிந்தை.

மிதுனம்- உண்மை வெல்லும், உயர்வும் உண்டு.

கடகம்- நிதி உதவி கிடைக்கும், நிமிர்ந்துநில்.

சிம்மம்- ஆணவத்தை அடக்கு, அலைச்சல் மிகுதி.

கன்னி- வாழ்க்கையில் புயல், வரவும் தடைப்படும்.

துலாம்- தேன் சிந்தும் பேச்சு, தேடியது கிடைக்கும்.

விருச்சிகம்- உள்வீட்டில் பூசல், உபத்திரவ மிகுதி.

தனுசு- அறிவுத்தாகம், ஆக்கப்பணி.

மகரம்- பனிமலரிப் பார்வை, பரிவின் உதயம்.

கும்பம்- திடீர்த் தாக்குதல், திகைக்க வைக்கும் சம்பவம்.

மீனம்- துளிர் விடும் காதல், ஒளிவிடும் வாழ்வு

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## நாட்டிலும் நகரிலும்

பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு இலக்கம் 8இல் ஓர் அலாதி பிரியம்— பிரேமை என்றும் கூறலாம். எண் சோதிடத்தில் அவருக்கு அபார நம்பிக்கை போலும். இல்லாவிட்டால் முக்கியமான விஷயங்கள் எல்லாவற்றையும் எட்டாம் திகதியிலும், எட்டு கூட்டுத்தொகையாக வரும் 17, 26 ஆகிய திகதியிலும் வைத்துக்கொள்வரா?

பாருங்கள், இப்பொழுது இலங்கை முழுவதையும் புரட்டி உருட்டி வரும் இந்த மாவட்டசபை சம்பந்தமான வெள்ளை அறிக்கை இருக்கிறதே. அதைக்கூட இம்மாதம எட்டாம் திகதி தான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போகிறாராம்.

இந்த எட்டில் என்ன அப்பேற்பட்ட மகிமை தங்கியிருக்கிறது என்று இவர் கொஞ்சம் தீவிர ஆராய்ச்சிகள் செய்தார். பிரதமர் அல்ல, உங்களுடைய இவர்.

எட்டு எழுத்துருவத்திலல்ல, எண் உருவத்தில் ஒரு மர்மமான பண்டம். 8 — இதைப் பாருங்கள். வேறெந்த எண்ணுக்காவது இல்லாத ஒரு தனித்துவம் இந்த உருவத்தில் இருப்பதை நீங்கள் கவனித்திர்களா? இல்லையா?

ஒன்று முதல் ஒன்பது ஈறுகவுள்ள எண்களில் எட்டு ஒன்றைத் தவிர மற்றவை எல்லாவற்றிற்கும் ஓர் அடி நுனி, ஆதி அந்தம் இருக்கிறது. இந்த எட்டுக்கு மட்டுமில்லை. அது அடியும் நுனியும் இல்லாத அரும் பெரும் சோதியாய் விளங்குகிறது.

சைபர் அல்லது பூஜ்யம் என்ற வட்டத்திற்கும் அடியும் நுனியுமில்லையே என்று நீங்கள் ஆட்சேபிக்கலாம்.

ஆனால்அதுஓர்எண்ணல்ல. வெறும் பூஜ்யம், அல்லது சூனியம், அது ஒரு முழுமையான வட்டம். எட்டைப் போல நெளிந்து வளைந்து செல்வதில்லை. எட்டை ஒரு வகையில் பார்த்தால் இரண்டு வட்டங்கள் சேர்ந்த ஓர் உருவம் என்றும் கூறலாம். ஆகையால் வட்டத்துக்கும் இருபடி மேலானது.

இதெல்லாவற்றையும் அறிந்துதான் பிரதமர் டட்லி இந்த மாவட்டசபை வெள்ளையறிக்கையை சமர்ப்பிப்பதற்கு எட்டாம் திகதியை தெரிவு செய்தாரோ?

8 எப்படி வளைந்து வளைந்து அடியும் நுனியுமில்லாமல் சுற்றித் திரிந்து கொண்டேயிருக்கிறதோ அதுபோல இந்த மாவட்ட சபையும் எவருக்குமே ஆதி அந்தம் தெரியாமல், அட்டித் தடுமாறி இழுத்துப் பறித்து ஒருவாறு வந்து சேர்ந்திருக்கிறது. ஒரு வட்டத்துக்கு பதிலாக அது 8 போல இரு வட்டமாகி விடுமோ?

எட்டைப்பற்றி இவ்வளவு கேவலமாக எவரும் நினைத்துக் கொள்ளப்படாது. அதில் நன்மையுமுண்டு. தீமையுமுண்டு. கடவுளை நோக்கி அஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறோம், அஷ்டதிக்குப் பாலகர்களை வணங்குகிறோம், அஷ்டமா சித்திகளை அடைய விளைகிறோம். இவையெல்லாம் நன்மையான விஷயங்கள். இவற்றிற்கு மாறாக அட்டமத்து சனியனும் வருகிறார். சிலர் எட்டாம் கட்டை (வங்குரோட்) எடுத்துக் கொள்கிறார்கள்.

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் - பொலிஸார் மோதல்

## பல நாடுகளிலும் பரவுகிறது

### ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் முதல் முறையாக ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜூன் 4

உலக நாடுகள் பலவற்றில் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளதாகவும் சில நாடுகளில் மாணவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே மோதல்கள் நிகழ்ந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாணவர் ஆர்ப்பாட்டத்துடன் இப்போது வேறும் பல நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன், இத்தாலி, ஜப்பான், யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் சென்ற சில தினங்களில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நிகழ்ந்துள்ளதாகவும், சில இடங்களில் ஒழுங்கை நிலைநாட்டப் பொலிஸார் சென்றபோது மாணவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே மோதல் ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**காயமுற்றனர்**

யுகோஸ்லாவியத் தலைநகரான பெல்கிரேடில் பொலிஸாருக்கும் மாணவருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் இருபது பேர்வரை காயமுற்றனர்.

பட்டப் படிப்புக்குப் பின் என்ன செய்வதென்றும், இது எந்தப் பாதைக்கும் தம்மை வழிநடத்தவில்லையென்றும் ஆட்சேபம் தெரிவித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**ஒக்ஸ்போர்டில்**

முதல் தடவையாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மாணவர்களது ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக அதிபரின் செயல் குறித்து ஆட்சேபம் தெரிவித்து இந்த மாணவர்கள் ஆர்ப்பாட்டம் தெரிவித்தனர்.

**ஜப்பானில்**

அமெரிக்கப் போர் விமானம் ஒன்று கியூஷூ என்ற ஜப்பான் பல்கலைக்கழக வளவில் விழுந்து நொறுங்கியது குறித்து இப்பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நகரிலுள்ள அமெரிக்கத் தளம் நீக்கப்படவேண்டுமென்றும் இவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

விமானம் பல்கலைக்கழக வளவுக்குள் விழுந்தது சம்பந்தமாக ஜப்பானிலுள்ள அமெரிக்க தூதர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

---

## துருக்கியில் மாண்டவர்கள் 18

இஸ்தான்புல், ஜூன் 4

துருக்கித் தேர்தல் சண்டைகளில் 18 பேர் கொல்லப்பட்டதாகவும், 120க்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியான ஜஸ்டிஸ் கட்சியே இம்முறை அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது.

அனடோலியா என்னும் தொகுதியில் இரு சகோதரர்கள் போட்டியிட்டபோது ஒரு சகோதரர் மற்றவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்தார்.

---

## விபத்தில்சிக்கினர் சுகர்ணோவின் மகன்

ஜாகர்த்தா, ஜூன் 4

இந்தோனேஷிய ஜனாதிபதி சுகார்னோவின் 18 வயது மகனான கிஜிட், கார் விபத்தொன்றில் சிக்கினர். இவர் காரைச் செலுத்திக்கொண்டிருந்தசமயத்தில் பிரிட்டிஷ் தூதரகத்துக்குச் சொந்தமான ஜீப் ஒன்றுடன் கார் மோதியதால் விபத்துக்குள்ளானார்.

---

## கம்போடியா மறுப்பு

நாம்பென், ஜூன் 4.

சிறை வைக்கப்பட்டுள்ள இரு அமெரிக்கப் பிரஜைகளை விடுதலை செய்யுமாறு அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை கம்போடிய இளவரசர் திரு. நரோடம் சிகானூக் மறுத்துள்ளார். எல்லையை மீறும் எவராக இருந்தாலும் உரிய தண்டனை அனுபவித்தே தீரவேண்டுமென அவர் பதில் தெரிவித்துள்ளார்.

---

## 'ராணுவரீதியில்மைந்தவகுப்புவாதம் கட்டுப்படுத்தப்பட வேண்டும்'

### காங்கிரஸ் வற்புறுத்தல்

புதுடில்லி, ஜூன் 4.

இராணுவ ரீதியிலமைந்த வகுப்புவாதத்தைக் கட்டுப்படுத்தவேண்டுமென அகில பாரத காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

புதுடில்லியில் கட்சித் தலைவர் திரு. நிஜலிங்கப்பா தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக் கமிட்டிக் கூட்டத்தில் வகுப்புவாதத்தால் அரசியல் நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இவ்வித தவறான போக்குகளால் பார்லிமென்டரி ஜனநாயகம் குலைந்து வருவதாகவும், இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை உடனடியாக மேற்கொண்டாக வேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டது.

**இளைஞருக்கு இடம்**

காங்கிரஸ் கட்சியில் இளைஞருக்கும் இடமளிப்பது சம்பந்தமாக உடன் கவனம் எடுக்கப்பட வேண்டுமெனவும் பிரான்ஸில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சி நல்லதொரு பாடமாகக் கருதப்பட வேண்டுமெனவும் ஒரு உறுப்பினர் எடுத்துக் கூறினார்.

---

## "மேலும் தாதிகளை அனுப்புக"

புலோலி, செவ்வாய்

மந்திகை ஆஸ்பத்திரியில் நிலவும் தாதிகள் பற்றுக் குறையை நீக்க மேலும் தாதிகளை அனுப்பித்தருமாறு சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரிமேலிடத்துக்கு அறிவித்துள்ளார்.

---

# பிரான்ஸில் பொதுத்தேர்தல் பிரசாரம் ஆரம்பம்

## 57 சதவீதத்தினர் டிகோலுக்கு ஆதரவு

பாரிஸ், ஜூன் 4

பிரான்ஸில் பொதுத்தேர்தலுக்கான பிரசார இயக்கம் ஆரம்பமாகநடைபெறத் தொடங்கியுள்ளது.

அதிபர் டிகோலுக்குஆதரவானவர்கள் ஒருபுறமும் எதிர்ப்பவர்கள் மறுபுறமும் தமதுஇயக்கங்களைத் தீவிரப் படுத்தியுள்ளார்கள்.

தேர்தல் முன்னோடியாக நடத்தப்பட்ட ஒரு கணிப்பில் அதிபர் டிகோலை 57சதவீதத்தினர் ஆதரித்துள்ளார்கள். 6 சதவீதத்தினர் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

பிரான்ஸில் பொதுத்தேர்தல் இம்மாதம் 23ந் திகதி நடைபெற விருக்கிறதென்பது தெரிந்ததே. இதற்கிடையே தொழிலாளர்வேலை நிறுத்தத்தில் மேலும் பல தொழிலாளர்கள் இறங்கியுள்ளதாகவும் தமதுகோரிக்கைகளில் அவர்கள் அசைந்து கொடுக்காதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது [illegible] தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

**பிரதமரின் வேண்டுகோள்**

தொழிலாளரின் வேலைநிறுத்தத்தால் நாடு பெருநஷ்டமடைந்து வருவதாகவும் இதனைக் கருத்தில் கொண்டு உடனே வேலைக்குத் திரும்பி நாட்டின் நலனுக்கு உழைக்குமாறுபிரெஞ்சுப் பிரதமர் திரு. பொம்பிடோ தொழிலாளர்களுக்கு [illegible] துள்ளார்.

---

**வியட்னாம்**

## சமாச பேச்சுவார்த்தை இன்று மீண்டும் ஆரம்பம்

### அமெரிக்க குண்டு வீச்சு நிறுத்தம் வற்புறுத்தப்படும்

பாரிஸ், ஜூன் 4

அமெரிக்காவுக்கும் வட வியட்னாமுக்குமிடையே நடைபெற்றுவரும் வியட்னாம் சமாதான பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நாளை மீண்டும் இங்கு ஆரம்பிக்கப்படும்போது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டபோது எழுந்த முட்டுக்கட்டைகளை நீக்கமுயற்சிகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடவியட்னாமிலிருந்து இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள நேற்று பாரிஸ் வந்து சேர்ந்த திரு. லிடொக்தோ இந்த முட்டுக்கட்டைகளை நீக்குவதில் பெரும் பங்குகொள்வார் என நம்பப்படுகிறது.

நேற்று திரு. தோ பாரிஸ் வந்து சேர்ந்தபோது, அமெரிக்க நிபந்தனையின்றி குண்டு வீச்சை நிறுத்தினால் பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட வழி பிறக்கும்எனக்கருத்துவெளியிட்டிருந்தார்.

பாரிஸில் முந்திய பேச்சுவார்த்தைகள் 20 நாட்களுக்குமேல் நடைபெற்றுள்ளது.

---

## 'விவசாயத்துறையை முன்னேற்ற வாலிபர் முன்வரவேண்டும்'

கோப்பாய், செவ்.

'நமது நாடு பொருளாதாரத்துறையில் தற்போது மற்றநாடுகளை விட மிகவும் பின்தங்கியுள்ளது. இந்நிலைக்கு காரணம் படித்த வாலிபர்கள் யாவரும் அரசாங்க சேவையை நம்பி வாழ்ந்ததேயாகும். ஆனால் இன்று நாட்டின் பொருளாதாரத்துறையைஅபிவிருத்தி செய்யவேண்டிய நிலை நமது வாலிப விவசாயிகள் கையிலேயே தங்கியுள்ளது. எனவேதான் அரசாங்கம் இந்நாட்டு வாலிப விவசாயிகள் மூலமாக விவசாயத்துறையை அபிவிருத்தியடைய வழிவகை செய்துள்ளது''.

கோப்பாய் வடக்கு அம்பாள் இளைஞர் விவசாயக் கழகத்தின் 14-வது ஆண்டு விழாவில் பேசுகையில் உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் கூறினார்.

கழகத் தலைவர் திரு. எஸ். தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படிவிழாவில் திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் எத்தனையோ படித்த பட்டதாரிகள் வேலையற்றநிலையில் நம் மத்தியில் உள்ளதாகவும். ஆகவே மேலும் அரசாங்க உத்தியோகத்தை நம்பி வாழாது நமது அடிப்படைச் சுதந்திரம், சமயம், கலாச்சாரங்களைப் பாதுகாக்கவும், விவசாயத்துறையை முன்னேற்றவும், இளைஞர்கள்முன்வரவேண்டுமெனவும், விவசாயத்துறையில் வாழ்க்கைக்குச் சிறப்பான வழியுண்டெனவும், எனவே இளம் விவசாயிகள் யாவரும் தமது மனப்பான்மையை மாற்றி நமது சமுதாயம், இனம் யாவும் சுயமரியாதையுடன் வாழவகை செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

யாழ். உதவி அரசாங்கஅதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது: தற்காலத்தில் விவசாயத்துறையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை ஒருபுதிய சகாப்த ஆரம்பம் என்று கூறலாம். இம் முன்னேற்றத்தை தளரவிடாது இந்நாட்டு வாலிபவிவசாயிகள் உபஉணவு உற்பத்தியில் அதிக ஊக்கம் செலுத்தி நாட்டை வளம்படுத்த முன்வரவேண்டும்.

கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், ஆசிரியர் திரு. க. இ. குமாரசாமி, திரு. எம். எஸ் இராஜசிங்கம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

---

**'வைத்தியத்துறையை**

## வேற்றுமை பாராட்டாமல் முன்னேற்றவேண்டும்'

— வில்லியம் அல்லீஸ்

யாழ்ப்பாணம், புதன்

''தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற வேற்றுமை பாராட்டாமல், 'வைத்தியத்துறையை' முன்னேற்ற வேண்டும் என்ற குறிக்கோளை நிலைநாட்டி வைத்தியர்கள் பாடுபட வேண்டும் என்று அகில இலங்கைச் சித்த ஆயுள் வேத வைத்தியசங்க 37 வது வருடாந்தக் கூட்டத்தில் 'சிறப்புரை நிகழ்த்துகையில் அரசினர் ஆயுள்வேத கல்லூரி அதிபர் பண்டிட், ஏ. டபிள்யூ வில்லியம் அல்லிஸ் குறிப்பிட்டார்.

வைத்தியாச்சாரி திரு. ஏ. கே. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும் பொழுது கூறியதாவது:- பழையகால ஆயுள் வேத வைத்தியர்கள் சிலர் கட்டுப்பாட்டை விதித்திருந்தனர். பணம் பெறுவதற்காகவல்ல. வைத்திய முறை நன்கு வளரவேண்டும் என்பதற்காகவே. வைத்தியன் மனத்தைரியம் உள்ளவனாகவும், பல நூல்களைப் பயின்றுள்ளவனாகவும், திறமையுள்ளவனாக, கருணைசாலியாக, பொது குணமுள்ளவனாக, நேர்மை உள்ளவனாக, உதவி செய்யும்தன்மை உள்ளவனாக இருக்க வேண்டும். வைத்தியர்கள் நோயாளிகளுடன் அன்பாக, ஆதரவாகப்பழகவேண்டும். வைத்தியர்கள் நோயாளிகளின் வீட்டுக்குச் செல்ல வேண்டியேற்பட்டால் தலைகுனிந்த வண்ணம், வேறு விஷயத்தில் அக்கறை காட்டாமல் நோயாளிமேல் கவனம் செலுத்த வேண்டும்.

[ந. நி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வடமராட்சி வழிகாட்டியாக விளங்குகின்றது'

உடுப்பிட்டி, செவ். ''வடமராட்சிப் பகுதியில் வேறெந்தப் பகுதியிலும் இல்லாத அளவு சனசமூக நிலையங்கள் பரந்த அளவில் சேவையாற்றியுள்ளதோடு, சிரமதான இயக்கங்களிலும் முன்நிற்கின்றன. இலங்கையிலுள்ள சகலகாரியாதிகாரி பிரிவுகளுக்கும் வடமராட்சி வழிகாட்டியாக விளங்குவது பெருமைக்குரியது'' என்று வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் பருத்தித்துறையிலுள்ள வடமராட்சி காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற வடமராட்சிச் சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டம் சமாஜத் தலைவர் திரு. இ. சு. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. பின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

சமாஜத்தினால் முதியோர் கல்வி வகுப்புகளை நடாத்துதல், சமாஜச் சுற்றுலாப் பயணம் செய்வது நிரந்தர சிரமதானத் தொண்டர் படை நிறுவுதல் சமாஜக் காரியதரிசியின் பெருமுயற்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச படக்காட்சியைச் சகல நிலையங்களிலும் காண்பித்தல்.

---

# திருட முயன்ற ஐ. ஆர். சி. கைது

யாழ்ப்பாணம், புதன். களவாட முயன்றதாகக் கூறப்படும் ஐ. ஆர். சி. ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டார். இச்சம்பவம் கரையூர் பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்ட கணபதிப்பிள்ளை சின்னராஜா இங்குள்ள கத்தோலிக்க தேவாலயமொன்றில் களவாட முயற்சித்தபோதே கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 6-ம் திகதி வரை அவரை றிமாண்டில் வைக்குமாறு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. எம். ஜமீல் உத்தரவிட்டார். [கா. நி.]

---

# அரசாங்க செலவில் அடக்கம்

உடுவில், செவ்வாய். மாரடைப்பு நோயினால் மரணமடைந்த ஒரு நபரின் சடலத்தை எடுத்துச் செல்ல எவரும் முன்வராததால் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது. இச்சம்பவம் நேற்று யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நடைபெற்றுள்ளது.

தாங்கமுடியாத வருத்தத்தால் அவதியுற்ற வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த பி. சரவணமுத்து (வயது 65) என்னும் நபர் சங்கானைப் பொலிஸ் உதவியுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மறுநாள் மரணமானார். மரணமடைந்தவரைப் பரிசோதித்த டாக்டர் எஸ். பத்மநாதன், இருதயபலவீனத்தால் மரணம் சம்பவித்தது என்று கூறினார். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

---

# கார் விபத்தில் படுகாயமுற்றார்

யாழ்ப்பாணம், புதன். நாவாந்துறையில் நடைபெற்ற கார்விபத்தொன்றில் படுகாயமுற்ற ராசாத்தி என்ற 45 வயது பெண்ணொருவர் அறிவிழந்த நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரை மோதியதாகக் கூறப்படும் காரையும், அதன் சாரதியையும் பொலிஸார் தேடி வருகின்றனர். [கா. நி.]

---

# கடையில் திருட்டு

கோப்பாய், செவ். கோப்பாயிலுள்ள பலசரக்குக் கடையொன்றில் ரூபா 500க்கு பெறுமதியான பணமும், பொருட்களும் இனந்தெரியாத நபரினால் களவாடப்பட்டது சம்பந்தமாக கோப்பாய் பொலிசார் புலன் விசாரணை நடத்திவருகின்றனர்.


உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான

## "வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை மர ஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:-

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனகதெரு, கொழும்பு. 12
தொலைபேசி: 7143 — 2029

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


# தந்தையும் மகனும் கைது

யாழ்ப்பாணம், புதன். களவுபோன மீன்பிடி வலைகளை வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் தந்தையும் மகனும் உட்பட மூவரை மீன்பிடி இலாகாவினரும் பொலிஸாரும் கைதுசெய்தனர். மீன்பிடி பகுதி இன்ஸ்பெக்டர்கள் இராமநாதன், சில்வா ஆகியோரும், பொலிஸ் சார்ஜன்ட் ரத்நாயக்காவுமே இவர்களைக் கைதுசெய்தார்கள்.

கைதுசெய்யப்பட்ட செபஸ்தியான், சின்னராஜா செல்வம் ஆகிய மூவரிடமிருந்தும் களவுபோனதாகப் புகார் செய்யப்பட்ட 10 மீன்பிடி வலைகளைப் பொலிஸார் கைப்பற்றினர். புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. [கா. நி.]

---

# ஆமைகளுக்கு வாழ்வு

புத்தளம், செவ். குளத்தில் ஆமை பிடித்த இருவருக்கு தலா 50 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. புத்தளத்தில் ஒரு குளத்தில் 16 ஆமைகளை இவர்கள் பிடித்தனராம்.

புத்தளம் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு புத்தளம் நீதிமன்றத்தில் நடைபெற்றது. எதிரிகளான சிலாபத்தைச் சேர்ந்த சார்ள்ஸ் ஜமக்கல் பர்னாந்து, டபிள்யூ. கே. இம்மனுவல் ஆகிய இருவரையும் குற்றவாளிகளாக கண்ட நீதிபதி தலா ரூபா 50 அபராதம் விதித்து, ஆமைகளையும் குளத்தினுள் திருப்பிவிடுமாறு உத்தரவிட்டார்.

---

# விவசாயிகள் கடன் திட்டம்

அராலி, செவ்வாய். அரசாங்க கமத்தொழில் இலாகா, விவசாயிகளுக்கு கடன் வழங்கி வந்தது. சென்ற செப்டம்பர் முதலாம் திகதி தொடக்கம் கமத்தொழில் ஆணையாளர் கடன்களை நிறுத்திவிட்டார். இக்கடன்களை மத்திய வங்கி விவசாயிகளுக்கு கொடுக்க முன்வந்தது. சென்ற காலபோக நெற்செய்கை, உருளைக்கிழங்குச் செய்கைக்கு பணம் வங்கியினால் கடனாக வழங்கப்பட்டுவந்தது. நெற்செய்கைக்கடனுக்கு, கடனைத்திருப்பிக் கொடுக்க 270 நாட்களும், உருளைக்கிழங்கு வெங்காயச் செய்கைக்கு 180 நாட்களும் வங்கி கொடுத்திருந்தது. கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வழங்கப்படும் இக்கடன்கள் இன்னும் அறவிடப்படவில்லை. இக்கடன்களை அறவிடும் நோக்கமாக கூட்டுறவுச் சங்க மனேச்சர்மார், சங்கத்தலைவர் காரியதரிசிகளுக்கு ஆலோசனை தெரிவிக்குமுகமாக அரசாங்க மேலதிக அதிபர் திரு. எம். சபாரத்தினம், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. பி. குமாரசாமி ஆகியோர் ஒரு மாநாட்டை அண்மையில் வலி. மேற்கு ப. நோ. கூ. சங்கங்களின் சமாச மண்டபத்தில் கூட்டினர். மாநாட்டில் உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் பேசும்போது, ''பெற்ற கடன்களை தவணை தப்பாது கட்டத்தவறும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேலும் கடன்கள் வழங்கப்படாதென்றும் கடன்களை அறவிடுவதில் கூட்டுறவுப் பரிசோதகர்களும் கடன்பெற்ற விவசாயிகள் இல்லந்தோறும் சென்று கடன்களைப் பெற முயற்சிகள் எடுக்கவேண்டும்'' என்றார்.

# போலந்து சென்றார்

பண்டத்தரிப்பு, செவ். இளவாலை சென். ஜேம்ஸ் சட்டம்பிக்குரவர் வண. பொமிக்கல் சுவாமியார் தமது தாயகமான போலந்திற்கு சென்ற மாதம் 26-ம் திகதி புறப்பட்டுச்சென்றுள்ளார். சில மாதகாலம் போலந்தில் தங்கியபின் மீண்டும் இலங்கை திரும்புவார்.

---

# பதவிஉயர்வுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன். பூநகரி கிராமசபை இலவச ஆயுள்வேத வைத்தியசாலையில் ஆயுள்வேத டாக்டராகக் கடமையாற்றிய திரு எஸ் இராசரத்தினம் பதவி உயர்வுடன் திருமலை கட்டபறிச்சான் கிராமசபைக்கு இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பூநகரி கிராமசபைக்கு தற்காலிகமாக ஆயுள்வேத டாக்டர் திரு. ஆர். தில்லைநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். [ந. நி.]

---

# எதிரி குற்றவாளி தீர்ப்பு 31ல்

வல்வெட்டித்துறை, செவ். அல்வாய் மேற்கைச் சேர்ந்த கே. யோகானந்தம் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த பி. தியாகு என்பவரை அடித்துக் காயப்படுத்தியதாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. சின்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 31-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

# நயினாதீவு ஆலய உற்சவம்

ஊர்காவற்றுறை, செவ். தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயமான நயினாதீவு நாகபூஷணி அம்பாள் வருடாந்த உற்சவம் இம்மாதம் 25-ந் திகதி ஆரம்பிக்கப்பட்டு பதினைந்து நாட்கள் வரை நடைபெறவிருக்கிறது.

---

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## புதன் 5-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 8-00 திரைகானம், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் விருப்பம்.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 கல்வி ஒலிபரப்பு, 5-15 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 புல்லாங்குழல் — எஸ். ஸ்ரீதாஸ், 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 நினைவுச் சரளம், 7-45 நாடகம் — ''இறைமும் துறவறமும்'' — சரவணையூர் மணிசேகரன் எழுதியது, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-45 இ. நா. சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

# உதவி டாக்டரை நியமிக்கவும்

ஊர்காவற்றுறை, செவ். தீவுப்பகுதியின் பெரிய ஆஸ்பத்திரியான ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு உதவி டாக்டர் ஒருவரை நியமிக்கவேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை நாரந்தனைக் கிராமசபை நிறைவேற்றியுள்ளது.

---

# இலங்கைக்கு ரூ.15 கோடி உதவி

கொழும்பு, புதன். இலங்கைக்கு ரூ 15 கோடிக்கு மேலான வெளிநாட்டு உதவி கிடைக்கவிருக்கிறது. பிரிட்டன், ஜப்பான், ஜேர்மன் ஜனநாயக குடியரசு, அமெரிக்கா, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா இன்னும் சில கூட்டு நாடுகள் இலங்கைக்கு இந்தக் கடன் உதவியை வழங்கவிருக்கின்றன.

---

# தொல்லை

வல்வெட்டித்துறை, செவ். தொண்டைமானாற்றில் திருடர்கள் தொல்லை அதிகரித்துக் கொண்டுவருகின்றது. நேற்று இரவு இரண்டு வீடுகளுக்குள் திருடர்கள் புகுந்து திருட முற்பட்ட சமயம் வீட்டின் சொந்தக்காரர் சத்தம் கேட்டு எழுந்த நேரத்தில் திருடர்கள் அவ்விடத்தைவிட்டு ஓட்டம் பிடித்தனராம்.

செல்வச்சந்நிதி கோவில் மடமொன்றில் ஒருவரின் உடுப்புகள் களவு போய் விட்டனவாம்.

---

# அமைச்சர் தகா நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய். வடக்கு கிழக்கில் சமூக ஏற்றத்தாழ்வு சம்பந்தமாக நிலவி வரும் நிலைமையை விசாரணை செய்ய உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயகா ஒரு கமிட்டியை நியமிக்கவிருக்கிறார்.

சமூகசேவை அமைச்சர் திரு அசோகா கருணரத்னாவின் கோரிக்கையின் பேரிலேயே அமைச்சர் டாக்டர் தகநாயகா இவ்வித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

---

# ''மக்களே பேண வேண்டும்''

யாழ்ப்பாணம், புதன். ''யாழ்ப்பாணப் பட்டினத்தில் வாழ்கின்ற மக்களின் சுகாதாரநலத்தை மக்களே பேணுகின்ற நிலை உருவாக வேண்டும். இக் கடமையை யாழ்நகர மேயர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்காது நாமே முன்னின்று செய்கின்ற பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.''

இவ்வாறு நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையச் சுகாதாரத்துறைத் தலைவர் திரு. அருமைத்துரை அண்மையில் நடந்த கூட்டத்தில் கூறினார். இக் கூட்டம் யாழ்ப்பாண மாநகரசபையின் குடிநல சுகாதார வாரத்தை ஒட்டி நடந்தது. இக் கூட்டத்திற்கலைக்கவி நீ எஸ் தாசிசி, திரு. செ. யோ. வீரசிங்கம், திரு. யோ. பிரான்சிஸ் ஆகியோரும் உரையாற்றினர். [நி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை கிரிக்கெட்

# மகாக்குவில் இந்து 2-ம் பிரிவுச் சாம்பியன்

குரும்பசிட்டி, செவ்வாய் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இரண்டாம்பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சாம்பியன் இறுதிப் போட்டியில் இந்துக்கல்லூரி 127 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் விளையாடிய இந்துக்கல்லூரியினர் தமது முதல் இன்னிங்ஸில் 244 ஓட்டங்களை எடுத்தனர். இதில் விஜயராசா என்ற வீரர் மட்டும் 120 ஓட்டங்களைக் கைப்பற்றினர். மகாஜனா தமது முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து182 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராஜானந்தன், தர்மேஸ்வரா ஆகியோர் முறையே 28, 50 ஓட்டங்களை எடுத்தனர்இரண்டாம்இன்னிங்ஸில் இந்துக் கல்லூரி மீண்டும் 108 ஓட்டங்களை பெற்றது. மகாஜனா எதிர் பாராத விதத்தில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 43 ஓட்டங்களை மட்டும் கைப்பற்றியது.

## ஊர்காவற்றுறை வெற்றி

ஊர்காவற்றுறை, செவ் காலஞ்சென்ற சமாதான நீதிபதியும் சுருவிலூர் வாசியுமான திரு. இ. நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான இரண்டாவது கரபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

கரம்பனில் நடைபெற்ற இப்போட்டிக்கு உடற்பயிற்சி போதனாசிரியர் திரு.பி. பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## ஐயனார் கோஷ்டி வெற்றி

ஊர்காவற்றுறை, செவ். வேலணை ஐயனார் சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் வேலணை - செட்டிபுலம் சனசமூக நிலையக் கோஷ்டிக்குமிடையே சிநேக பூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஐயனார் கோஷ்டி வெற்றி பெற்றது.

## வண்டிச் சவாரி போட்டி முடிவுகள்

உடுவில், செவ். வலிகாமம் வடக்கு விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் அளவெட்டி பிரும்ம வெளியில் நேற்று மாலை நடைபெற்ற மாட்டு வண்டிச் சவாரியில் வெற்றி பெற்றோர் விபரம் பின்வருமாறு:--

ஏ பிரிவு திரு. ரி. கந்தையா, சுன்னாகம், திரு. ஏ. சிமான், சுன்னாகம், திரு. எஸ். தம்பையா உரும்பிராய்,

பி பிரிவு திரு. கே. சின்னத்தம்பி, உடுவில், திரு. ரி. அப்புத்துரை, புளியங்கூடல், திரு. கே. மயில்வாகனம். சங்குவேலி.

சி பிரிவு திரு. எம். அருமைத்துரை, உடுவில், திரு. ஆர். இராஜேந்திரன், உரும்பிராய், திரு. பி. துரைராசா, பண்டத்தரிப்பு,

## கரம்பன் வெற்றி

ஊர்காவற்றுறை, செவ். காலஞ்சென்ற சுருவிலூர் நல்லதம்பி ஜே. பி வெற்றிக் கிண்ணத்திற்காக நடைபெற்ற கரபந்தாட்டத்தில் கரம்பன் ஏ பிரிவுக்கோஷ்டி வெற்றி பெற்றது. புளியங்கூடல் மகா.மாரி சனசமூக நிலையக் கோஷ்டி ஒரு ஆட்டத்திலும் கரம்பன் கோஷ்டி இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றன.

## 'நாவலர்களாக்கவே போட்டிகள்'

சுழிபுரம், ஞாயிறு "வருங்கால செல்வங்களான சிறார்களை நல்ல நாவலர்களாகவும் பாவலர்களாகவும் ஆக்க வேண்டும் என்ற ஒரேநோக்குடன் தான் கந்தவர்கள் இயல்இசைப் போட்டியை நடாத்துகின்றனர் போட்டியில் கலந்து கொள்ளும் சிறார்கள் தாம் எடுத்துக் கொண்ட பொருளை நன்கு கவனம் எடுத்து ஆயத்தம் செய்யவேண்டும். அப்போதுதான் போட்டியில் வெற்றியடைலாம்"

இவ்வாறு வலிகாமம் மேற்கு தமிழாசிரியர் சங்கம் நடாத்திய பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டிதர்சி. வேலுப்பிள்ளை குறிப்பிட்டார். சங்கத்தலைவர் திரு. எஸ். நல்லதம்பி விழாவுக்கு தலைமை வகித்தார்.


ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ
நடித்த
நான் யார் தெரியுமா?

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
முத்துராமன் நாகேஷ்
நடிக்கும்
முகூர்த்தநாள்

வின்ஸர்
எம். ஜி. ஆர்.
பானுமதி - பத்மினி
நடித்த
மதுரைவீரன்
[புதிய கொப்பி]

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Goodie Witheres &
John McCallum
in
PORT OF ESCAPE

MANOHARA
JAFFNA
Daily: 4-45, 7-00 & 9-45 P.M.
SEX AND THE
SINGLE GIRL


# வரி விளம்பரம்

### தேவை

பிரமாண்டமான விவசாய ஸ்தாபனம், மலைநாடுகளிலும் இதர தமிழ்ப் பிரதேசங்களிலும் ஆரம்பிக்கவிருக்கும் தொழிற்பண்ணைகளில் பதவிவேற்பதற்கு ஜி.ஸி.ஈ. சாதாரணக் கல்வியறிவுடைய திடகாத்திரமுள்ள வாலிபர்கள் தேவை. வயது 18-23. விண்ணப்பதாரருக்குக் குறைந்தபட்சம் ரூ.500 முதலீடு செய்யும் தகைமை வேண்டும். நிரந்தரத் தொழில்வசதியும் நல்லமுன்னேற்றமும் உண்டு. நிர்வாக அதிபர். த.பெ.இல. 1483, கொழும்பு என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1336

எமது தொழிற்சாலையில் வேலை செய்ய பெண்கள் தேவை. விபரங்கள் நேரில். ராஜா இன்டஸ்ரீஸ், புத்தூர், ந. அமரசிங்கம். 1337

100 வருடங்களுக்கு மேலாக உலகப்பிரசித்தி பெற்ற 'ஒல்க்ரோடீசல்' உழவு இயந்திர நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு மேற்பார் வையாளர்கள், கிளை மனேஜர்கள், காசாளர்கள், லிகிதர்கள், தொழில் நுட்ப பயிற்சியாளர்கள் போன்ற பதவிகளுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ரெக்கப்பிளைகட்டக்கூடிய ஆண்களும் பெண்களும் விண்ணப்பிக்கலாம். நிரந்தர வேலை வாய்ப்பும், நல்ல முன்னேற்றமும் உண்டு. வடமாகாண விண்ணப்பங்களை, "TAS", கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் விலாசத்திற்கும், கிழக்கு மாகாண விண்ணப்பங்களை "TAS", நாவற்குடா, காத்தான்குடி என்னும் விலாசத்திற்கும் விண்ணப்பிக்கவும். 1338

உயர் பிரயோக கணிதம், இரசாயனம், தமிழில் க. பொ.த. வகுப்பிற்கு கற்பிக்க ஆசிரியர் தேவை. மாலை 5 முதல் 8 வரை. ஸ்ரீ மீனாட்சி கமர்ஷியல் கல்லூரி சினிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 1339

### கல்வி

உயர்தரத் தொடர்கல்வி மன்றம், காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பழை. இம் மன்றம் ஜி. சி. ஈ. சாதா. உயர் என இருவகைப்பரீட்சைக்குரிய வகுப்புக்களையும், மிக்க திறமைவாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு, 15-6-68 அளவில் தொடங்கி நடத்த முடிவு செய்துள்ளது. பாடங்கள்: தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகம், இரசாயனம், உயிரியல், ஆங்கிலம், தமிழ்மொழி, சைவசமயம், பூமிசாஸ்திரம், பொருளியல் ஆதியன, விண்ணப்பபத்திரம், விபரம் கடிதமூலம் பெறுக. சி.சேதுகாவலர், M.A.B.O.L.B.T. 1341

வகுப்புகள்:
ஜி. சி. ஈ. (சாதாரணம்) கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் / சிறிகள காலை / மாலை வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாண டியூடோறியல் கல்லூரி, 60, ஆரசடி வீதி, (நட்டா தெரு சந்தி), யாழ்ப்பாணம். 1328

### வாடகைக்கு

வீடு:
கொழும்புத்துறை இலந்தகுளத்து ரோட்டில் ஒரு வீடு வாடகைக்கு இருக்கிறது. மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில். விபரங்களுக்கு: சி. இராசேந்திரம், 105, கொழும்புத்துறை. 1340

### விற்பனைக்கு

காணி:
12 1/2 பரப்புபனைக்காணி விற்பனவுக்கு கோண்டாவில் கிழக்கில் இருக்கின்றது. விபரங்கட்கு தொடர்புகொள்ளவும். விலாசம்: திருமதி தியாகராசா அன்னம்மா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1335

## பிரதமரை அழைக்க முடிவு

அநுராதபுரம், செவ். வடமத்தியமாகாண தபால் அதிபர்களின் விசேஷ பொதுக்கூட்டம் திரு. கே. இராமச்சந்திரன் தலைமையில் அநுராதபுரம் தபால் நிலையத்தில் நடைபெற்றது.

புதிதாக அமைக்கப்பட்ட தொலைபேசி நிலையத்தை பிரதமர் டட்லி சேனநாயக்காவைக்கொண்டு திறந்து வைப்பதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## ஊரெழு வெற்றி

உடுவில், செவ். சுன்னாகம் பொலிஸ் கோஷ்டியினருக்கும் ஊரெழு சனசமூக நிலையக்கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் ஊரெழு சனசமூக நிலைய கோஷ்டியினர் வெற்றியீட்டினர்.

## கலைவிழா

ஊர்காவற்றுறை, செவ். புங்குடுதீவு பாடசாலையின் கலைவிழா ஒன்றை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


சென்னையில் 100 நாட்களுக்கு ஓடிய சிறந்த வள்ளுவ காவியம்!
கெப்பிடல்
(கொழும்பு)
2-00, 6-00, 9-30
'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-30
இதற்கு நீங்கள்
— சொல்லப்போகும் பதில்
மக்கள் திலகம்
எம். ஜி.
ராமச்சந்திரன்
சரோஜாதேவி
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
பேபி ஷகிலா
தங்கவேலு
நடித்த
ஸ்ரீ முத்துக்குமரன்
பிக்சர்ஸ்
அளிக்கும்

பெற்றால்தான் பிள்ளையா?
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு


# 'ஈழநாடு' வெற்றிக்கிண்ண நெடுந்தூர ஓட்டப்போட்டி

உடுவில், செவ். வலிகாமம் வடக்கு உடுவில் பகுதி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விளையாட்டுச் சுற்றுப் போட்டியில் 'ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்திற்கான நெடுந்தூர (12மைல்கள்) ஓட்டப் போட்டி. இம்மாதம் 9-ம் திகதி நடைபெற இருக்கிறது

பல வீரர்கள் பங்கு பற்றும் இப்போட்டி ஜூன் மாதம் 9-ம் திகதி காலை உடுவில் மருதனார்மடம் சந்தியில் இருந்து ஆரம்பிக்கும். சுன்னாகம், மாவிட்டபுரம், மல்லாகம், சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய் சந்திகளுக்கு ஊடாக இப்போட்டி நடைபெற்று மருதனார்மடத்தில் முடிவடையும்.

அதே தினத்தில் நடைபெறும் மற்றொரு போட்டியான 20 மைல் சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்) மருதனார்மடத்தில் ஆரம்பித்து காங்கேசன்துறை வீதி மயிலிட்டி, பலாலி வீதி - உரும்பிராய் சந்திகளுக்கு ஊடாக மருதனார்மடத்தை வந்தடையும்.

10மைல் சைக்கிள் ஓட்டம் (பெண்கள்) போட்டி அதே இடத்தில் ஆரம்பித்து மானிப்பாய் வீதி - உடுவில் டச் ரோட் வழியாக சிரணி சண்டிலிப்பாய், மானிப்பாய், சுன்னாகம் சந்தி வழியாக மருதனார்மடத்தில் முடிவடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெல்குத்தும் மிஷின் உதிரிபாகங்களை

# இறக்குமதிசெய்ய லைசென்ஸ் வழங்குக"

யாழ்ப்பாணம், புதன்

"நெல் குத்தும் மிஷின்களின் உதிரிப்பாகங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலும் கள்ள மார்க்கட்டில் அப்பாகங்கள் கூடிய விலைக்கு விற்கப்படுவதாலும் அப்பாகங்களை இறக்குமதி செய்ய மில் சொந்தக்காரர்களுக்கு தனித்தனி லைசென்ஸ் வழங்க வேண்டும்"

வட இலங்கை மில் உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த கூட்டம் சொக்குவில் ராஜா மில்லில் நடந்தபோது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

திரு. எம். ரீ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள்:- தற்பொழுது அரசாங்கம் புசல் ஒன்றுக்கு 82 சதம் தருகிறது. இத் தொகையை ரூ 1-25 சதமாகக் கூட்டவேண்டும்.

ஜூன் 15ம் தேதிக்குள் அரசாங்கம் சாக்கின் விலையைக் கூட்டிக் கொடுக்காவிடில், அரசாங்க கோட்டாவுக்கான குத்துவதை நிறுத்துவது, அல்லது அரிசிக்குத்தில் நெல்லைக் கொட்டி விட்டு சாக்குகளை கொண்டு வருவது. தற்பொழுது அரசாங்கம் சாக்கிற்கு 98சதம் மட்டும் தருகிறது. சாக்கின் விலை அதிகரித்திருப்பதால், ரூ. 1-45 சதம் தர வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

## கண்டக்டர் தற்கொலை

முல்லைத்தீவு, செவ்.

தண்ணீரூற்றைச் சேர்ந்த முன்னாள் பஸ் கண்டக்டரான கணபதிப்பிள்ளை சண்முகம் (வயது 58) நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். ஏ. பெர்னாண்டோ தற்கொலை என தீர்ப்பளித்தார்.

## தண்ணீர் தட்டுப்பாடு

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலையிலுள்ள தண்ணீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால், நோயாளர்கள் தங்கள் வீடுகளிலிருந்து தண்ணீர் எடுத்துச்செல்கின்றனராம். இது பற்றி மேலதிகாரிகளுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

## நோயாளருக்கு உணவு வசதி

வவுனியா, திங்கள்

வவுனியா ஆஸ்பத்திரியிலுள்ள சகல நோயாளருக்கும் மத்தியானச் சோறு கொடுப்பதற்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள கிராமசபைகள் முன்வந்துள்ளன.

இதற்கு வேண்டிய பொருள்களைப் பல கிராம முன்னேற்றச் சங்கங்கள் சேகரித்துவருகின்றன என அறிவிக்கப்படுகிறது.

## போட்டி முடிவுகள்

வவுனியா, செவ்வாய்

வவுனியா மாவட்ட மகா வித்தியாலயங்களின் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் வவுனியா மகாவித்தியாலயம் (ஆண்களும் பெண்களும்) 114 புள்ளிகளைப்பெற்று முதலிடம் பெற்றது.

காமினி மகா வித்தியாலம் [ஆண்கள்] 43 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் [ஆண்கள்] 28 புள்ளிகளைப் பெற்று 3ம் இடத்தையும் பெற்றன.

சைவப்பிரகாச வித்தியாசாலை [பெண்கள்] 16 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் மடுக்கந்தை மகாவித்தியாலயம் [பெண்கள்] 9 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும் பெற்றன.

## நாட்டிலும் நகரிலும்

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

இப்படியே இந்த எட்டு என் னென்னவெல்லாமோ செய்கிறது.

வருகிற எட்டாம் திகதி நன்மைக்கா தீமைக்கா என்று எவராலும் கூறமுடியாத நிலையில் இருக்கிறது.

—வழிப்போக்கன்

## உத்தேச மாவட்ட...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

ராட்சி அமைச்சராக இருந்தபோது உள்ளூராட்சி மன்றங்களுக்கு சில உரிமைகளையும் அதிகாரங்களையும் கூடுதலாக அளித்தார். இதனால்தான் இன்றும் அவரை உள்ளூராட்சி மன்றங்களின் தந்தை என அழைக்கின்றனர். நாட்டின் நிர்வாகம் ஒரே இடத்தில் குவிந்திருக்காமல் பரவலாக்கப்படவேண்டும் என்று அவர் கருதினார்.

பிரதேச சபைகள், மாவட்டசபைகள் என்ற பிரச்னை தோன்றுமுன்னரே சமஷ்டி ஆட்சிமுறை இலங்கைக்குப் பொருந்தும் என்று திரு. பண்டாரநாயக்கா வெளிநாட்டுப்படிப்பை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பியதும் கருத்துத்தெரிவித்தது இந்த நோக்கத்தில் தான். ஆனால் பின்னர் அவர் சமஷ்டி ஆட்சி இலங்கைக்கு ஏற்றதல்லவென்றும் அது நாட்டைப் பிரிக்கும் என்றும் கூறினார். எனினும் நிர்வாகத்தைப் பரவலாக்க வேண்டுமென்பதை அவர் மறுக்கவில்லை. இதனால் 1957-ம் ஆண்டில் பிரதேச சபைகள் அமைக்கவேண்டுமென்பதற்கு அவர் ஒப்புக் கொண்டார்.

ஆனால் இப்போது வெளிவந்திருக்கும் மாவட்டசபைகள் மசோதாவின்படி, அமைக்கப்படவிருக்கும் மாவட்ட சபைகள், பொது மக்களுக்கு மாவட்டங்களின் நிர்வாகத்தின் கூடியளவுபங்களிக்கும் நோக்கம்கொண்டிருந்தாலும் ''அரசாங்கத்தின் பணிப்பின் கீழும், கட்டுப்பாட்டின் கீழும்'' இயங்குமகையால் எந்த அளவுக்கு நிர்வாகம் பரவலாக்கப்படுமென்பது சிந்திக்க வேண்டிய விஷயம்.

[தொடரும்]

## கலக்கு கலக்கிய ஐந்து பாம்புகள்!

உரும்பராய், செவ்.

5 விஷப்பாம்புகள் நேற்று உரும்பராய் கிழக்குப் பகுதியிலுள்ள மக்களை ஒரு கலக்குக் கலக்கி விட்டனவாம்! 'கருவலை' என்று கூறப்படும் இந்தப் பாம்புகள் ஒரு வீட்டு வளவுக்குள்ளிருந்து திடீரென்று வெளிக்கிளம்பியதாம். இதனால் அப்பகுதி மக்கள் பயத்தினால் அங்குமிங்கும் ஓடினார்களாம். கடைசியில் இப்பாம்புகள் அடித்துக்கொல்லப்பட்டனவாம்.

## ஜோன்சன் மன்னிப்பு கோரினார்

வாஷிங்டன், ஜூன் 4

தென்வியட்னாம் ராணுவ உயர் அதிகாரிகள் 6 பேர் அமெரிக்க ஹெலிகாப்டரிலிருந்து பாய்ந்த குண்டினால் கொல்லப்பட்டது சம்பந்தமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் தென்வியட்னாம் அதிபரிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

(கொல்லப்பட்டது அமெரிக்க ராணுவ உயர்அதிகாரிகள் என நேற்று வெளியான செய்தி தவறு)

## மாடுகள் திருட்டு

ஊர்காவற்றுறை, திங்கள்

காரைநகரில் வயல்களில் விடப்படும் மாடுகள் களவாடப்படுவதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவம் நள்ளிரவுகளில் நடைபெறுகின்றனவாம். இது பற்றி காரைநகர் இளைஞர் விவசாயக் கழகம் அரசாங்க அதிபரிடம் புகார் செய்துள்ளது.

## தற்காலிக வேலை நீக்கம்

நெடுங்கேணி, செவ்வாய்

வவுனியாவிலுள்ள ஒரு பல. நோ. கூ. சங்கமனேஜர் ஒருவர் ஐம்பத்தி ஏழு பைக்கற் சிமெந்தை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. வவுனியா மாவட்ட கூட்டுறவு மேலதிகாரியிடமிருந்து இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம்.

## கைதடி.........

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆயுள் வேத டாக்டர்கள் ஜி. சீ. ஈ. [சாதாரணம்] சிங்களப் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்ற நிபந்தனை நீக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் சித்த ஆயுள்வேதக் கல்லூரியை அரசாங்கம் பதிவு செய்து மாணவ மாணவிகளுக்கு பதிவுசெய்த ஆதாரப் பத்திரம் வழங்க வேண்டும்.

தொடர்ந்து பாடசாலையை நடாத்த அனுமதி தரவேண்டும், 38-வது ஆண்டு விழாவில் மூலிகைகளும், மருந்துகளும் அடங்கிய ஒரு கண்காட்சி விழாவை கொழும்பில் கொண்டாடுதல்.

கூட்டத்தில் பிரதம சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட வைத்தியக் கலாநிதி திரு. எஸ். வி. சந்திரசேகர் உரையாற்றுகையில் ''நாடு முன்னேற நாட்டின் பொருளாதாரம் முன்னேற வேண்டும். பொருளாதாரம் முன்னேற வேண்டுமானால் [illegible] வேண்டும்'' என்றார். (நிருபர்)

## விவசாய கடன்

வவுனியா, செவ்வாய்

பெரியதம்பனை பல நோக்குக் கூட்டுறவு சங்கம் அரசாங்கத்திடம் கடனாகப் பெற்ற ரூபா 38, 000 ரூபாவில் முப்பத்தையாயிரம் ரூபாவை விவசாயிகளிடம் வசூலித்துள்ளது. மிகுதிப் பணத்தையும் மாதம் 5-ம் திகதிக்கு முன்னர் வசூலிப்பதற்கு முயற்சி செய்து வருகிறது.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

வட்டுக்கோட்டை சிவன் இந்து சமய அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்:- டாக்டர் அ. க. குமாரசாமி, கர்த்தா சபையினர்:- திருவாளர்கள் மு. இராசரத்தினம். ச. இராசரத்தினம். வ. தெட்சணாமூர்த்தி, தலைவர்: திரு. மு. க. வீரசிங்கம். பொதுச் செயலாளர்;- திரு. பொ. பு. இராஜசேகரம். நிர்வாக செயலாளர்:- வ. பண்டரிநாதன். பொருளாளர்:-- திரு. நா. இராசரத்தினம். உப தலைவர்கள்:- திரு. க. முத்துலிங்கம், திரு. நா. சிவலோகநாதன்.

4பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், புதன்

புத்தூர் 'கலைமகள்' சனசமூக நிலையத்தின் 20-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. ச. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்கள்: திருவாளர்கள் திரு. ச. மு. முருகேசு, வீ. சின்னப்பு' க'செல்லையா தலைவர் திரு. இ. சிவஞானம் உபதலைவர் திரு. வ. கனகசபை இணைச் செயலாளர்கள்:- திருவாளர்கள் க, சிவரத்தினம், இ. சச்சிதானந்தம். தனாதிகாரி:- திரு. வ. திருஞானசம்பந்தர். கணக்குப் பார்வையாளர்-: திரு. கி. அருந்தவம்.

ஏழுபேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. இப்பகுதி காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளையும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

## பட்டதாரிகள் மகஜர்

கோப்பாய், செவ்வா

கோப்பாய் தொகுதி வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்திடம் மகஜரொன்றை சமர்ப்பித்துள்ளது.

இம் மகஜரில். இந் நாட்டில் வாழும் சகலஇனவேலையற்ற பட்டதாரிகளுக்கும் அரசாங்க சேவை, கூட்டுத்தாபனங்கள் உள்ளூராட்சி சபைகள், தனியார் ஸ்தாபனங்கள் முதலியவற்றில் வேலை வாய்ப்பளித்து தருவதற்கு கட்சி அரசியல் பேதமின்றி முன்வரும்படி கேட்டுள்ளனர்.

## எதிரிகள் விடுதலை

ஊர்காவற்றுறை, செவ்.

சரவணை கிராமத்தைச் சேர்ந்த அரியரவி பொன்னுத்துரை என்பவருக்கு மண்டாவால் காயப்படுத்தியதாகக் குற்றம் சாட்டி அதே இடத்தைச்சேர்ந்தசெல்லன் டானியல், குசைந்திருஞானம் அல்லது ஞானம் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு சென்றவாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது விசாரணையின் பின் ஊர்காவற்றுறை நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

## காயப்படுத்திய வழக்கு

ஊர்காவற்றுறை, செவ்.

காரைநகர் களபூமிவாசிகளான ஆறுமுகம் சிவகுருநாதர் தம்பிப்பிள்ளை ஆகியோர், அதே இடத்தைச் சேர்ந்தவேலுப்பிள்ளை நல்லதம்பி என்பவரை உலக்கையால் அடித்துக் காயப்படுத்தியதாகக் குற்றம் சாட்டி ஊர்காவற்றுறைநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்துள்ளார்.

## இரண்டாகப் பிரிக்கப்படும்

உடுவில், செவ்வாய்

சுமார் 12, 000க்கு அதிகமான குடிசனம் உள்ள ஏழாலை கிராமசேவையாளர் பிரிவு இரண்டாகப் பிரிக்கப்படவிருக்கிறது.

கிராமசேவையாளர்களின் புதிய எல்லை நிர்ணயிப்பு வேலைகளின் படி ஏழாலை கிராமசேவையாளர் பகுதியை வடக்கு, தெற்கு என பிரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## எத்தனை......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வரும் மற்றும் சில பிரமுகர்களுடன் பேராதனைக்குப் புறப்பட்டார்கள்.

எத்தனைமுறை இலங்கைக்கு வந்தாலும் ஒவ்வொரு முறையும் புதிதாகவேஇருக்கிறதென்றும், தமிழிலும் சைவத்திலும் பற்றுள்ள இலங்கைத் தமிழர்களோடு கலந்து அளவளாவிப்பெறும் இன்பம், மறுமுறை இங்கு வரும்வரை உள்ளத்தில் நின்று சுவைக்குமென்றும் தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன் தெரிவித்தார்.

முதற்தடவையாக இலங்கைக்கு வந்திருக்கும் பேராசிரியர் வே. சிவசுப்பிரமணியன், இலங்கைவாழ் மக்களின் அன்புமழையில் நனைந்து பழந்தமிழ் வளத்தை நுகரும் ஆசையாக வந்திருப்பதாகவும் தமிழ் பண்பு என்ற சொல்லுக்கு இலக்கியமாக விளங்குபவர்கள் இலங்கை மக்கள் என்பதை திரு. ஜகந்நாதன் பலமுறை தனக்கு கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் சில நாட்கள்இங்கு தங்கியிருந்து பல சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

## இராணுவ!......

1-ம் பக்கத் தொடர்ச்சி

அட்மிரல், கடற்படை காப்டன் திரு. ராஜன் கதிர்காமர், இலங்கை விமானப்படை கமாண்டர் மார்சல் ரோகன் அமரசேகரா ஆகியோர் அங்கம்வகிக்கின்றனர். பொலிஸ் தலைமைக் காரியாலயத்திலும், இன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலிக்அபயகுணவர்த்தன உயர் மட்ட மாநாடொன்றைக் கூட்டினார். இம் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் நேற்று கொழும்பு வந்தார். இம் மகாநாட்டில் மற்றும் பொலிஸ் அதிபர்களும் கலந்துகொண்டனர்.

இம்மாதம் 8-ந் திகதி எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும், சட்டம் ஒழுங்குகள் பற்றியும் இம் மாநாட்டில் கூறப்பட்டதாக தெரிய வருகிறது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 1-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன்மாதம் 5-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org